**செய்தி வெளியீடு எண் : 094** **நாள் : 13.01.2023**

சென்னை, பெசண்ட் நகர் கடற்கரையில் யானைப் பொங்கல் விழா,
வன வலிங்குகள் பாதுகாப்பு விழிப்புணர்விற்கு யானைகள் அணிவகுப்பு கண்காட்சி
மாண்புமிகு வனத்துறை அமைச்சர் டாக்டர் . மா.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்.

…………………………………………..

சென்னை, பெசண்ட் நகர் எட்வர்டு எலியாட்ஸ் கடற்கரையில் இன்று (13.01.2023) தமிழர்களின் பொங்கல் விழாவில் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவதுபோல், வன விலங்குகளை பாதுகாத்தல் மற்றும் அந்நிய களைச் செடிகளை அழித்தல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, வனத்துறை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யானைப் பொங்கல் விழா, அந்நிய களைத் தாவரங்களால் உருவாக்கப்பட்ட யானைகள் கண்காட்சியை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாட்டின் வனப் பரப்பை அதிகரிப்பதுடன், வன விலங்குகள் பாதுகாப்பு மற்றும் அந்நிய களைத்தாவரங்களை அழிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட வனத்துறை சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த அரசு பதவியேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக வனங்களை பாதுகாக்கவும், வன விலங்குகள் மற்றும் பறவைகள் பாதுகாப்பிற்காக குறிப்பாக அழிந்து வரும் பறவைகள் மற்றும் வன விலங்குகளை பாதுகாக்க தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

வன உயிரினங்கள் பாதுகாப்பில், குறிப்பாக அழிந்து வரும் வன உயிரினங்களை பாதுகாப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களின் தலைமையில் தமிழ்நாடு அரசு பல முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் சிறப்புக்குரியவை;

- பாக் வளைகுடாவில் இந்தியாவின் முதல் கடல் பசு பாதுகாப்பகம்
- விழுப்புரம் மாவட்டத்தில் கழுவேலி பறவைகள் சரணாலயம்
- அகத்தியர் மலை யானைகள் பாதுகாப்பகம்
- திருப்பூர் நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயம்
- தென் காவிரி வனவிலங்கு சரணாலயம்
- ரூபாய்.25.14 கோடி மதிப்பில் நீலகிரி வரையாடு இனம் பாதுகாப்புத்திட்டம்
- ரூபாய்.300 கோடியில் செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூரில் நவீன தொழில் நுட்பத்தில் தாவரவியல் பூங்கா

மிகக் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட இந்த புதுமையான முயற்சிகள் வன உயிரினப் பாதுகாப்பு நடவடிக்கைகளில், தமிழ்நாட்டுக்கு ஒரு உன்னத இடத்தை அளித்துள்ளது.

கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில், 11,806 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள வனப்பகுதிகள், தேவாங்குகளின் முக்கிய வாழ்விடங்களாக

"கடவூர் தேவாங்கு சரணாலயம்" அமைத்து தமிழ்நாடு அரசு அறிவிக்கை செய்துள்ளது.

இந்தியாவில் பாறு கழுகுகளின் எண்ணிக்கையானது பல காரணங்களால் குறைந்து வந்தாலும், முக்கியமாக கால்நடை சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் சில கால்நடை மருந்துகளின் பாதகமான தாக்கத்தினாலும் குறைந்து வருகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் பாறு கழுகுப் பாதுகாப்புக்கு ஊக்கமளிக்கும் வகையில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை 10 பேர் கொண்ட மாநில அளவிலான பாறு கழுகுப் பாதுகாப்புக் குழுவை அமைத்து அரசாணை வெளியிட்டுள்ளது

இதுபோன்ற வனப்பாதுகாப்பு மற்றும் வன விலங்குகள் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திட யானைப் பொங்கல் விழா, யானைகளின் அணி வகுப்பு கண்காட்சி 13.01.2023 முதல் 19.01.2023 வரை பொதுமக்கள் பார்வைக்காக கிண்டி தேசிய சிறுவர் பூங்கா மற்றும் சென்னை வன உயிரின மணடலம் சார்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள், வனத்துறை முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (துறைத் தலைவர்) திரு. சுப்ரத் மஹாபத்ர , இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்/தலைமை செயல் அலுவலர் (கேம்பா) திரு.சுதாநாஷீ குப்தா, இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வன உயிரின காப்பாளர்) திரு.சீனிவாஸ் ரா ரெட்டி இ.வ.ப., கிண்டி தேசிய சிறுவர் பூங்கா மற்றும் சென்னை வன உயிரின காப்பாளர் திரு.ஈ.பிரசாந்த் இ.வ.ப., கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்கள் மற்றும் மாவட்ட வன அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும், பிரிட்டிஷ் அரசு துணை தூதர் ஆலிவர் பாலாசெட் குடும்பத்தினருடன் கலந்து கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in